திருவைந்தெழுத்து

(சிவயநம)



* கழக வெளியீடு *

ACC No_34783
67-2

67-2

கழக வெளியீடு: எ௦சு

திருவைந்தெழுத்து

[சிவயநம]

KOVILOOR ANDAVAR
A. R.
34783
LIBRARY, KOVILOOR

ஆசிரியர் :
சித்தாந்த பண்டிதர், கழகப்புலவர்,

திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கள்

[முதற் பதிப்பு]

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1

பதிப்புரை

திருவைந்தெழுத்து, தொன்மைத் தமிழகத்து வழங்கிய தமிழ்ப்பொருண்மறை. இஃது ஐந்து பொருள்களைக் குறிக்கும் அருள்மறை. இறை உயிர் தளை என்னும் மூன்றும் முறையே பதி பசு பாசம் எனப்படும். முப்பொருள்களுள் இறையாகிய முதல்வன், தன்னிலை இயக்கும்முறை யாகியவற்ருல் மூவகைப் படுவன். தன்னிலையில் சிவம்; இயக்கும் நிலையில் அறிவாற்றல் தொழிலாற்றலென இருவகை. அறிவாற்றல் வனப்பு. தொழி லாற்றல் நடப்பு. தன்னிலை சிறப்பு. உயிரின்நிலை யாப்பு. தளை யின்நிலை மறைப்பு. வனப்பு தொல்லாற்றல் எனவும், நடப்பு தொடக்க ஆற்றல் எனவும் கூறப்படும். தொல்லாற்றல்—பரா சத்தி. தொடக்க ஆற்றல்—ஆதிசத்தி. மறைப்பின்கண் மலம் மாயை கன்மம் மூன்றும் தொக்குள்ளன.

இவ்வைந்தினையும் விளக்குவதே 'சிவயநம' என்னும் தமிழ் மறை. யகரமாகிய ஆவி வகர நகரமாகிய திருவருள்ஆற்றல் களுக்கு நடுவாக நிற்கின்றது. இவ் ஆவியாகிய யகரம் உலகிய லாகிய மகரத்தைச்சேர நகரம் துணைசெய்தல் வேண்டும். எனவே நகரம் மகரத்திற்குக் காலமுன்னுதல் வேண்டும். இதுவே 'நமசிவய.' ஆவி திருவடியைச்சேர வகரமாகிய திருவருள் சிகரத்திற்கு இடமுன்னுதல் வேண்டும். இதுவே 'சிவயசிவ.' இது முதல்நிலையில் 'சிவயநம'; முடிந்தநிலையில் 'சிவயசிவ' என்ப.

உலகியல் வீட்டியல் இரண்டையும் உள்ளவாறுணர்த்தும் பொருள்மறை திருவைந்தெழுத்தே. இதனைத் திருமுறை சித்தாந் தம் முதலிய அருள்நூல் சான்றுகளுடன் விளக்குவது இந்நூல். உலகியலை 'ஊனநடனம்' எனவும், வீட்டியலை 'ஞானநடம்' எனவும் கூறுப. ஏனைய மறைகளெல்லாம் தெய்வம் முதலிய பொருட்பெயர்களேயாகும். ஐந்தெழுத்துப் பெயரும் பண்பும் முதலும் முடிவும் காட்டும் முதன்மை மறையாகும். மறை— மந்திரம். இதனைச் சிறப்பாகச் செந்நெறியாளரும் பொதுவாக அனைவர்களும் அன்புடன் ஓதி இன்புறுவார்களாக. இதனை விடாது கணிப்பார் பசி, நோய், பேய், நச்சுயிர், பகை முதலிய ஒன்ருலும் துன்புருர். அவற்ருல் துன்புறுவாரது துன்பத்தையும் போக்குவர். எல்லா நலமும் எய்துவர். கூற்றுவனுக்கு ஆளாகார். கூத்தப்பெருமான் திருவடிக்கு ஆளாவர். எல்லா நற்செயல் தொடங்கும்போதும், வீட்டிலும் திருக்கோவிலிலும் பூசையும் திருவிழாவும் நடக்கும்போதும் முற்ருக ஓதவேண்டுவது இவ் வைந்தெழுத்தேயாம். இதனினும் மிக்க மந்திரமில்லை என்பது ஆளுடைய பிள்ளையார் அருள்மொழி. இதனைக் கணிக்குமாறு ஓதியும் ஓதுவித்தும் அன்பர் நாளும் இன்புறுவாராக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

ஓம்
திருச்சிற்றம்பலம்

திருவைந்தெழுத்து

மறை

திருஐந்தெழுத்து என்பது செம்பொருட்டுணிவினராம் சித்தாந்த சைவச் செந்நெறிச் செல்வர்கள் மேற்கொண்டு நாளும் கணித்துவரும் பொருள் மறை ஆகும். கணித்தல் - செபித்தல். மறை - மந்திரம். மந்திரம் இருவகைப்படும். அவை பொருள்மறை புகழ்மறை என்பன. பொருள்மறை மெய்ப்பொருள் உண்மை விளக்குவது. புகழ்மறை கருதியது கைகூடக் கணிக்கும் கடவுட் புகழாகும். கடவுட் புகழாவது வழிபடுகடவுளை முன்னிலைப்படுத்தி அவன் திருவடியினைப் போற்றிப் பராவுவது. போற்றிப் பரவுவார் கருதியது கைகூட அருளுவது இப்புகழ்மறையேயாம். பொருள்மறை இறை உயிர் தளை என்னும் முப்பொருள் உண்மை செப்புவது. இம் முப்பொருள்களைக் குறிக்கும் எழுத்துக்கள் மூன்று. அவை முறையே 'சியம' என்பன. திருஐந்தெழுத்துக்களைக் கூறுங்கால் முறையே 'சிவயநம' என்ப. இவையே பொருள் மறை. புகழ்மறை 'ஓம் முருகா போற்றி' என்னும் தொடர் மொழியாகும். இதனை ஆறெழுத்து அருமறை என்பர். இதன் பொருள் முருகன் திருவடிக்கு வணக்கம் என்பதாகும். இதனை வடமொழியால் கூறுங்கால் 'ஓம் முருகாயநம' என்ப. இதுபோல் வந்தது அன்று 'சிவயநம' என்பது.

ஐந்தெழுந்து

'சிவயநம' என்பது ஏனைய புகழ்மறைபோல் இருக்குமானால் ஐந்தெழுத்து என மட்டும் வழங்கிப் பொருள்

ஒன்றே காட்டுவர். இஃது அங்ஙனமன்றி ஐம்பொருள் உண்மை காட்டுவதால் இதனை ஐந்து பதம் எனக்கூறி ஐம் பொருளும் காட்டுவர் நம் முன்னோர்கள். ஏனைய மந்திரங் களுக்கு எழுத்தெண்ணிக்கை காட்டப்பட்டாலும் ஒவ் வோர் எழுத்துக்கும் ஒவ்வொரு பொருள் குறிக்கப்படும் மரபு இதுகாறும் எவரும் காட்டினரல்லர். மறையுண்மை யும், அதற்குத் தனிப்பேர் ஆற்றலுண்மையும், அதனைக் கணிப்பார் அருளால் கருதிய பயன் கைகூடப்பெறுதலும் கண்டும் கேட்டும் வருகின்ற பண்டும் இன்றும் என்றும் உள்ள பழந்தமிழ்ப் பண்பாம் என்க. மறைமொழியினைக் குறிக்குங்கால் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார்:

> "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப."
>
> —தொல். செய். கஎக.

இதன்பொருள்: நிறைமொழி மாந்தர் -(திருவருளாற் கூறும் தோலா நல்லிசை மேலோர் வாய்மொழி நிறைந்த பயனைத் தருமாதலால் அவர்கள்) நிறைமொழி மாந்தர் என்று சிறப்பித்துக் கூறப்படுவார். ஆணையின் - அவர் தம் கட்டளையாக, கிளந்த - கூறியருளிய, மறைமொழி - சொல்விளங்கப் பொருள் மறையக் கூறும் மந்திரம், தானே -, மந்திரம் என்ப - செந்தமிழ்த் திருமாமறை என்று தெய்வத் தமிழ்நூல் வல்லார் கூறுப.

இதனை வலியுறுத்தும் வாய்மையில் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளுவதும் காண்க:

> "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
> மறைமொழி காட்டி விடும்." —திருக்குறள், உஅ.

மறைமொழி இறைமொழியே என்னும் முறையும் காண்க. என்னை? மெய்யடியார்கள் தம்முனைப்பற்றுத் திரு வருள் முனைப்புவழி என்றும் மாறாது ஒழுகும் நன்றுசேர் திருவினர் ஆகலின். அவர்தம் அருட்செயல் பணி எனப் படும். ஏனைத் தன்முனைப்புள்ளார் செயல் வினை எனப்படும்.

பணிக்குப் பயன் சிறப்பு. வினைக்குப் பயன் பிறப்பு. சிறப்பு - வீடுபேறு.

ஆளுடையபிள்ளையார் தனதுரையைத் தலைவனாகிய ஆண்டவன் உரையென்றே அருளினர்.* அதனால் அருள் கைவந்த ஆன்றோர் நிறைமொழி மாந்தராவர். அவர் வாய் மொழி ஆண்டவன் அருள் மொழியே. அதுவே மறை மொழி; அதுவே மந்திரம்.

ஐந்துபதம்

“ அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி ”† என ஆளுடையநம்பி அருளி உள்ளார்கள். எனவே ஐந்தெழுத் தென்பது ஐந்து சொற்களின் தனித்தனி முதல் எழுத்துக் களாகும். ஐந்து சொற்களால் பெறப்படும் ஐந்து பொருள் களையும் திருமுறைத் திருமாமறையும், மெய்கண்ட நூல் களும் விரித்து விளக்குகின்றன. வேதத்தை அறம் எனவும் ஆகமத்தை நூல் எனவும் வழங்குதல் அருள்நூல் மரபு. அந்த முறையில் திருமுறை பன்னிரண்டும் அறம் எனவும், சித்தாந்தம் பதினான்கும் நூல் எனவும் வழங்குதல் அமை வுடைத்து.

திருஐந்தெழுத்து “ **சிவயநம** ” இவை விளக்கும் பொருள் சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலம்மாயை என்பன. இவற்றைக் குறிக்கும் திருமூலர் திருப்பாட்டு வருமாறு:

“ சிவன்அருள் ஆய சிவன்திரு நாமம்
சிவன்அருள் ஆன்மாத் திரோதம் மலம்மாயை
சிவன்முத லாகச் சிறந்த நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே.”

—க0. உஎகக.

நிரோதம் - தடை. பவம் - இருவினை; பிறப்பு.

* ‘திருமலர்க்’—க. எசு-உ. † ‘அந்தியும்’—எ. அரு-க.

“சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவன்எழுத்து அஞ்சின் அடைவாம்—இவன்நின்று
நம்முதலா ஓதில்அருள் நாடாது நாடும்அருள்
சிம்முதலா ஓதுநீ சென்று.”
—மெய். உண்மைவிளக்கம்—௩௧.

இவன் - ஆன்மா ; உள்ளம்.

“திருஎழுத் தஞ்சில் ஆன்மாத் திரோதமா சருள்சி வஞ்சூழ்
தரநடு நின்ற தோன்றும் தன்மையும் தோன்மை யாகி
வரு ம ந மிகுதி யாலே வா சியில் ஆசை யின்றிக்
கருவழிச் சுழலும் மாறும் காதலார்க்கு ஓத லாமே.”
—சிவப்பிரகாசம். ௬௧.

“இறைசத்தி பாசம் எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத் துள்.”
—மெய். திருவருட்பயன். அ௨.

ஓங்காரம்: அ, உ, ம், விந்து, நாதம் ஐந்து; இவை தொகை. திருஐந்தெழுத்து வகை; ஐந்துபதம் ஐம்பொருள் என்பன விரி.

“சிவயநம”—என்னும் சொற்போக்கு முறையின்படி உய்த்துணரின் சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு, மறைப்பு என்றாகும்.

சிறப்புவனப்பு யாப்பு நடப்பு மறைப்போடு
உறக்காண்பர் ஐந்தெழுத்தி னுள்.

சிறப்பு—என்பது சிவத்தைக் குறிக்கும். ‘சிறப்பு ஈனும்’ என்றும், ‘சிறப்பென்னும் செம்பொருள்’ எனவும் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருமொழியான் இஃது உணரலாம்.

வனப்பு—அழகு; ஆருயிர்களைச் சிறப்பாகிய சிவத்துடன்கூட்டிப் பேரின்பம் உறச்செய்யும் பேரருள்.

யாப்பு—பிணிப்புடையது; புல்லுமலம் என்னும் ஆணவ அழுக்கு ஆவிகளுடன் செம்பிற் களிம்புபோல் தொன்மையே ஒட்டியுள்ளது. அப்பிணிப்பினை நீக்கு விக்க ஆண்டவன் நோய்க்கு மருந்துபோல் இருவினையினை யும், மருந்துக்கலம்போல் உடம்பினையும், மருந்துக் கூட் டுப்போல் ஊணினையும், மருத்துவ இல்லம்போல் உலகினை யும் கூட்டி யாப்புறுத்தினன். யாப்பு—கட்டு, 'சிவய' யக ரம் குறுக்கும் வழிக் குறுக்கல், என்னே? 'ஆவோ டல்லது யகரம் முதலாது' (தொல். எழுத். சூ) ஆகலான். ஐந் தெழுத்து முற்றும் தனித் தனி ஒவ்வோர் மாத்திரையே.

நடப்பு—நடத்துதல்; ஆவிகளை மேற்கூறிய மலம், மாயை, கன்மங்களுடன் குழந்தைகளைக் கைப்பிடித்து நடத்துவது போன்று நடத்துதல். இதனையே ஆட்டுவித் தல் என்பர். இத்திருவருளை ஆதி எனவும் கூறுப. ஆதி எனினும் அம்மை எனினும் ஒன்றே. இவ் ஆதி தொழில் ஆற்றலாகும். தொழிலாற்றல் அறிவாற்றலோடு பிரிப் பின்றி ஒருங்கு இயைந்தே தொழில் செய்யும். அதனுல் அவ் ஆதிக்குத் தன் உடம்பைப் பகுந்து கொடுத்தவன் பகவன். அவனே அப்பன். அம்மையோடுகூடிய அப்ப னையே திருவள்ளுவ நாயனர் "ஆதிபகவன்" எனக் கடவுள் வாழ்த்து முதல் திருப்பாட்டில் அருளிச் செய்வாராயினர். உண்மை இவ்வாறிருக்க, அவ்வுண்மை உணரும் மதுகை யில்லார் திருவள்ளுவ நாயனரின் தாய் தந்தையரைக் குறிக் கும் என்றனர்

அம்மைஅப்ப ரேஉலகுக்கு அம்மைஅப்பர் என்றறிக
அம்மைஅப்பர் அப்பரிசே வந்தளிப்பர்--அம்மைஅப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பர் அவர்.

—திருக்களிற்றுப்படியார். க.

மறைப்பு—பண்டேபுல்லிய தொன்மை மலம் பல ஆற் றல்களையுடையது. அம்மல ஆற்றல் ஒவ்வோர் ஆவியை யும் பல்வேறு வகையாகப் பற்றியுள்ளது. அஃது இறை

வனைக் காண ஒட்டாது மறைக்கும் தன்மையது. அம் மட்டோ ஆவி, தன்னையும் காண ஒட்டாது மாசுபடர்ந்த பளிங்குபோல் அவ் ஆவியைப் படர்ந்து நிற்கும். அவ்வாற்றலைச் சிறிது சிறிதாகத் தேய்த்து அடக்குவதற்காகவே இருவினை இருமாயைகளை ஆண்டவன் ஆவியுடன் கூட்டியருள்வானாயினன். இம் மலம் மாயை கன்மங்கள் தொழிற்பட இயைந்தியக்கித் துணைசெய்யும் திருவருள் ஆற்றல் நடப்பு என்பதாகும். ஆணவம், கன்மம், மாயை இரண்டு, நடப்பாற்றல் ஆக ஐவகையும் மறைப்பு என்ப. மறைப்பாற்றல் எனினும் நடப்பாற்றல் எனினும் ஒன்றே. இதனைத் திரோதானசத்தி எனவுங் கூறுப.

ஐந்தெழுத்தின் அருள்முறை

"சிவயநம"—'சிவ' என்னும் ஈரெழுத்தும் விழுமிய முழுமுதற் சிவத்தையும் அவனுக்குத் திருமேனியாகத் திகழும் திருஅருள் ஆற்றலையும் குறிப்பன. இவ்விரண்டும் நிலைமொழியின. 'ய' ஆவிகளைக் குறிக்கும் பொருள்மறை. இது வருமொழி. இம்மொழி நிலைமொழியுடன் புணர்ந்து சிவய என்று ஆகும். பின் 'ந' வருமொழியாக வரும் இது நடப்பாற்றல். இவ் ஆற்றல்தான் ஆவிகளை உலகியலிற் புகுத்தி ஆட்டும் அருள். இதுகூடச் 'சிவயந' என்றாகும். இவை நான்கும் நிலைமொழியாக நிற்க 'ம' வருமொழியாக வரும். இதுவே உலகியல். ஓவாது உலகியலில் உழலும் உயிர்கள் வீடு பேற்றை எய்துதல் வேண்டும். அதற்கு நடப்பாற்றல் வனப்பாற்றலாகத் திகழ்தல்வேண்டும். அங்ஙனம் திகழும் முறையே 'சிவயசிவ'. இதன்கண் 'சிவய' என்னும் மூன்று எழுத்துக்களும் நிலைமொழியாக நிற்கச் 'சி'கரம் வருமொழியாக வரும். அங்ஙனம் வரும் 'சி'கரம் 'ய'கரத்தைப் புணரும்; புணர்ந்து அவ் 'ய'கரமாகிய ஆவிக்குத் திருவடிப் பெருவாழ்வைச் 'சி'கரமாகிய சிவம் நல்கியருளும். 'சி'கரம் 'ய'கரத்தைப் புணருமாறு செய்வது 'சிவயசிவ' என்னும் திரு ஐந்தெழுத்தின்கண் ஈற்றில் காணப்படும் இடமுன்னாகிய 'வ'கரமேயாம். இப்புணர்ச்சி முறையினையே பட்டினத்தடிகள் 'தாயுடன் சென்று பின்

தாதையைக் கூடிப் பின் தாயை மறந்து, 'ஏயுமதே நிட்டை' என்று அருளிச் செய்துள்ளார். அத்திருப்பாட்டு முழுவதும் வருமாறு :

"மாயநட் டோரையும் மாயா மலமேனும் மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாம்
தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப்பின் தாயை மறந்(து)
ஏயு மதேநிட்டை என்றான் எழில்கச்சி ஏகம்பனே."

மெய்யருள்:—ஆவி ஆண்டானைக் கூட அவ் ஆவிக்கு உடம்படு மெய்யாகத் திகழும் 'வ'கரம். இதனை ஓர் ஒப்பில் கூறின் 'சிவ' + அடியார் என்னும் நிலைமொழி வருமொழிகள் புணருங்கால் சிவவடியார் என்று வகர உடம்படு மெய் பெற்றுத் திகழும். இச்'சிவயசிவ' என்பதனையே மீநுண் ஐந்தெழுத்தென்ப. மீநுண் ஐந்தெழுத்து அதிசூக்கும பஞ்சாக்கரம் என்ப. இவ்வுண்மை வரும் திருமூல நாயனார் திருப்பாட்டாலும் காண்க :

" சிவாய நமஎனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவ சிவ என்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே."

க௦. உஎக௪.

இதன்கண் 'சிவாயநம' எனவும் 'சிவாயசிவ' எனவும் வந்தன நீட்டும் வழி நீட்டல். எனவே அவை இயல்பாக நிற்கின் 'சிவயநம' எனவும் 'சிவயசிவ' எனவுமே நிற்கும். 'சிவயநம' நுண்மை ஐந்தெழுத்து. 'நமசிவய' பருமை ஐந்தெழுத்து. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மாத்திரை ஒவ்வொன்று.

திரு ஐந்தெழுத்தின் சிறப்பு

இஃது உலகிடைக் காணும் ஏனைய மந்திரங்கள் எல்லாம் தோன்றுதற்குத் தாயாகவுள்ளது. தோன்றிய மந்திரங்கட்கெல்லாம் முதன்மை வாய்ந்தது. வடமொழி

மறையின் மயக்கை ஒழிப்பது. இவையெல்லாம் ஆளுடைய பிள்ளையார் சீகாழி அந்தணர்கட்கு அருளிய அருள் மொழியாற் புலனுவன. இவ்வுண்மை வரும் திருப்பாட்டான் உணர்க:

"மந்திரங்க ளானவெலாம் அருளிச் செய்து
மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த
சிந்தைமயக் குறும்ஐயம் தெளிய எல்லாம்
செழுமறையோர்க் கருளியவர் தெளியும் ஆற்றல்
முந்தைமுதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
முதலாகும் முதல்வனுர் எழுத்தஞ் சென்பார்
அந்தியினுள் மந்திரம்அஞ் செழுத்து மேயென்று
அஞ்செழுத்தின் திருப்பதிகம் *அருளிச்செய்தார்."
—கஉ. திருஞான - உகூகூ.

"வைத்த பொருள்நமக் காமென்று சொல்லி
மனத்தடைத்துச்
சித்தம் ஒருக்கிச் சிவாய நமஎன்
றிருக்கின்அல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வார் அவர்பா
திரிப்புலியூர்
அத்தன் அருள்பெற லாமோ அறிவிலாப்
பேதைநெஞ்சே." —ச. கூச - ரு.

என ஆளுடைய அரசரும் அருளினர்.

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே."
—அ. திருவே. கo.

என ஆளுடைய அடிகளும் அருளினர்.

---

* 'துஞ்சலும்'—உ. கசச - க.

திருஐந்தெழுத்து மந்திரத்தின்முன் ஏனைய மந்திரங்கள் பகல் விளக்குப்போல் வலியிழந்து ஒழியும். அவ்வுண்மை திருஆலவாயின்கண் ஆளுடைய பிள்ளையார் அமர்ந்தருளிய திருமடத்து அரசன் உடன்பாட்டோடு அமணர் மந்திர வலியால் தீக்கொளுவ முயன்றனர். அது பயன்பெறவில்லை; அக்குறிப்பை அருளவந்த சேக்கிழாரடிகள் ஆதிமந்திரம் அஞ்செழுத்து ஓதுவார் கண்ணெடுத்து நோக்கும் திசையினும் 'ஏனை மந்திரம்' நண்ணாது என்று அருளினர். அது வருமாறு:

"ஆதி மந்திரம் அஞ்செழுத்து ஓதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைமந் திரவிதி வருமே
பூதி சாதனர் மடத்தில்தாம் புனைந்தசா தனைகள்
சாதி யாவகை கண்டமண் குண்டர்கள் தளர்ந்தார்."
கஉ. திருஞான - சுகூஅ.

மாதிரம் - திசை. கண்டமண்: கண்டு + அமண்.

செந்தமிழ்த் தவமுதாட்டியாராம் ஔவைப் பிராட்டியாரும் தாம் அருளிய நல்வழிக்கண் மாணவர் ஓதிப் பயிலுமாறு உள்ளன்புடன் ஓதியருள்வதும் 'சிவயநம' என்னும் திருஐந்தெழுத்தேயாம். அது வருமாறு:

"சிவாய நமஎன்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்." —நல்வழி - கரு.

சிந்தித்தல் - இடையறாது எண்ணல். அபாயம் - துன்பம். உபாயம் - வழி. மதி - மெய்யுணர்வு. விதி - ஊழ்.

இளங்கோ அடிகள் அருளிய முத்தமிழ்ச் செய்யுளாம் சிலப்பதிகாரத்தின்கண்ணும் திருஐந்தெழுத்து ஓதப்படுகின்றது:

அருமறை மருங்கின் ஐந்தினும்..........

ஐந்தினும்—திருஐந்தெழுத்தினும். —சிலப். கஉஅ,

ஆளுடைய நம்பி சிவபெருமான் திருவருளால் விடுக்கப்பட்ட யானையின்மீது இவர்ந்து திருவெள்ளிமலைக்குச் சென்றருளினர். அவ்யானையைக் கொண்டு வந்து அடி பணிந்து வணங்கி அழைத்துச் சென்றவர் 'வானநாடர்கள் அரி அயன் முதலானோர்'* என்க. நம்பிஆரூரர் வெள்ளை யானைமேற் வெள்ளிமலைக்குச் செல்கின்றமையை உள்ளன் பால் உணர்ந்து சேரமான்பெருமாள் நாயனார் உடன்சேவித்துச் செல்ல உன்னினர். அப்போதே அண்மையிற் சார நின்றதோர் பரியின்மீது இவர்ந்து சென்றனர். விண்ணிடைச் செல்லும் வெள்ளானையைக் கண்டனர். தம் பரியினையும் விண்ணிடைச் செலுத்த விழைந்தனர். அப்பரியின் செவியில் திருஐந்தெழுத்தை ஓதினர். அதுவும் விரைந்து முன் விண்ணிடைச் சென்றது. எனவே, திருஐந்தெழுத்து எண்ணிய எண்ணியாங்குத் திண்ணமாய் நண்ணுவிக்கும் வண்ணம் வாய்ந்தது. அத்திருப்பாட்டு வருமாறு :

"விட்ட வெம்பரிச் செவியினிற் புவிமுதல்
வேந்தர்தாம் விதியாலே
இட்ட மாஞ்சிவ மந்திரம் ஓதலின்
இருவிசும்பு எழப்பாய்ந்து
மட்ட லர்ந்தபைந் தெரியல்வன் தொண்டர்மேல்
கொண்டமா தங்கத்தை
முட்ட எய்திமுன் வலங்கொண்டு சென்றது
மற்றதன் முன்னுக."—௧௨. வெள்ளானை-௩௬.

சிவமந்திரம் : "சிவயசிவ." யானை : சீலம், நோன்பு செறிவு, அறிவு என்னும் நற்றவம் நான்கனுள் அறிவுநிலையைக் குறிக்கும் குறிப்பு ஆகும். பரி : செறிவு நிலையைக் குறிக்கும் குறிப்பாகும்.

ஐந்தெழுத்தே ஆண்டான் வடிவம்

அருவம், அருஉருவம், உருவம் என்னும் மூவகைப் பிழம்பினையும் கடந்த நிலையே விழுமிய முழுமுதல்வன்

---

* 'வானநா' - ௧௨. வெள்ளானை - ௧௨.

நிலை. அருவம், கட்புலன் ஆகா உருவம். அருவுருவம் கட்புலன் ஆகியும் திணைபால் உணர ஒண்ணு நிலையது*. உருவம் கட்புலனுய்த் திணைபால் உணரும் செம்மை வாய்ந்தது. அருவுருவநிலையைச் சிவக்கொழுந்தாய்க் காண்கின்றேம். உருவநிலையை இன்பக்கூத்தர் தம் எழிலுருவாய்க் காண்கின்றேம். சிவக்கொழுந்து - சிவலிங்கம். இன்பக் கூத்தர் - ஆனந்தத்தாண்டவர்; நடராசப்பெருமான். இன்பக்கூத்தர் எழிலுருவம் திருஐந்தெழுத்தாலமைந்தது. இவ்அமைவை விளக்கும் திருப்பாட்டு ஒன்பதுள்ளன. அவ்ஒன்பதும் மெய்கண்டநூற்கண் ஆறுவதாகக் காணப்படும் உண்மைவிளக்கத்துத் திகழ்வன. அத்திருப் பாட்டுக்கள் நாள்தொறும் ஆண்பெண் சிறுமகார் அனைவரும் வழிபாட்டு அருளுருவாய் அன்பால் மனங்கொண்டு வழுத்தி வழிபடுதல்வேண்டும். அத்திருப்பாட்டுக்கள் வருமாறு:

"நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத்து அஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்றுடல் உள்ளபடி—பெற்றிடநான்
விண்ணுர் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணுர் அருளாலே சாற்று.

*நற்றவத்தோர் - செம்பொருள் துணிவினராம் சித்தாந்த சைவர். அஞ்செழுத்து - '*நமசிவய*,' '*சிவயநம*.'*

எட்டும் இரண்டும் உருவான இலிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாயநம என்னும் திருஎழுத்தஞ் சாலே
அவாயமற நின்றுடு வான்.

எட்டு-அ. இரண்டு-உ. அ-முழுமுதற்சிவம். உ-திரு அருள் ஆற்றல். இவை முறையே அப்பன் அம்மை எனவும் அமையும். எட்டும் இரண்டும் கூடின் பத்து. பத்தென்பது எண்ணுல் குறிப்பின் ய; இஃது ஆவியைக்

---

* *திணைபால் அணையாத் திருவுருவே எல்லாத்
திணைபால் உருமுதலாம் செப்பு.*

குறிக்கும் திரு ஐந்தெழுத்துள் ஒன்றாகிய யகரமாகும். புதல்வா-நன்மாணவா.

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருஅடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

இத்திருப்பாட்டுக் கீழிருந்து மேல்நோக்குதல். இம்முறையே நறும் புகையும் உறும் ஒளியும்கொண்டு மேல் அவ்வவ் இடங்களைச் சுட்டிக்காட்டி வழிபடுதல் வேண்டும்.

சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்.

துடி-வலத்திருக்கையிற் காணும் உடுக்கு, வீசுகரம்-தூக்கிய இடத்திருஅடியைச் சுட்டிக்காட்டும் இடத் திருக்கை. முயலகனார்-முயற்சியைத் தடைசெய்வது. இத் திருப்பாட்டு மேலிருந்து கீழ் நோக்குதல்.

ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்—ஆங்காரம்
அற்றார் அறிவர்அணி அம்பலத்தான் ஆடல்இது
பெற்றார் பிறப்பற்றார் பின்.

திருவாசி ஓங்காரமாய் அமைந்திருப்பதால், அதனை அங்ஙனமே சுட்டி நறும்புகையும் உறும் ஒளியும் காட்டுக.

தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

படைத்தல் காத்தல் துடைத்தல் என்னும் முத் தொழில்களையும் மூன்று திருக்கைகளின் அடையாளத்

திருக்குறிப்பால் விளக்கியருளினர். மறைத்தல் அருளல் என்னும் இரண்டினையும் இரண்டு திருவடிகளால் விளக்கி அருளினர். எனவே கை செயலையும், அடி வழியையும் குறிப்பன. முத்தொழில் உடம்பின்கண் நிகழ்வன. ஏனைய இரண்டும் உயிரின்கண் நிகழ்வன.

மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தான்எந்தை யார்பரதம் தான்.

மாயை: ஆடையில் பட்டதுகள் ஒக்கும். வினை: ஒட்டுப் புல்லை ஒக்கும். மலம்: குளிர் பனி வாடைக் காற்று முதலியவற்றை ஒக்கும். இம்முறையில் முறையே உதறல் சுடுதல் அமுக்கல் என்னும் அமைந்த வினை கொடுத்து விளக்கி அருளினர்.

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும்—ஆனந்தம்
மோண்டருந்தி நின்றுடல் காணும்அருள் மூர்த்தியாக்
கொண்டதிரு அம்பலத்தான் கூத்து.
உரையுணர்வுக் கெட்டா ஒருவன்மிகு பஞ்சாக்
கரத்தால் வரைமகள்தான் பாதி—பரையிடமாக்
காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு.

—மெய், உண்மை விளக்கம்-௩௦-௮.

இவ் ஒன்பது திருப்பாட்டுக்களும் வழிபாட்டு முறைக்கு வேண்டுவனயாவையும் அமைந்த சிறப்பின. முதல் திருப்பாட்டு ஆசிரியர் வணக்கம். இரண்டாம் திருப் பாட்டு அருமறை அருளும் ஆசான் அருள்வாழ்த்து. அடுத்த இரண்டு பாட்டுக்கள் முறையே நமசிவய, சிவயநம என்னும் ஆண்டவன் மறையுரு. அடுத்தபாட்டு ஐந் தெழுத்தின் தொகையாகிய ஓம். ஆறுவது திருப்பாட்டு திரு

ஐந்தொழில். ஏழாந்திருப்பாட்டு மும்மலப்பிணிப் பகற்றல். எட்டாந் திருப்பாட்டு ஆவிப் பசையறல். ஒன்பதாம் திருப்பாட்டு வீடுபேறு. மறையுரு - மந்திர வடிவம்.

ஐந்தெழுத்தே அனைத்தும்

அண்டமும் பிண்டமும் ஆகிய உலகமும் உடல்களும் திரு ஐந்தெழுத்தாலானவையே. பண்டைச் சிவவாக்கியர் பாடலும் இதனை வலியுறுத்துவது காண்க:

"நவ்விரண்டு காலதாய் நவின்றமவ் வயிறதாய்ச்
சிவ்விரண்டு தோளதாய்ச் சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதாய் எழுந்துநின்ற நேர்மையின்
சேவ்வையோத்து நின்றதே சிவாயம்அஞ்செழுத்துமே."

—சிவவாக்கியர், கூஎ.

அஞ்செழுத்தால் ஐந்துபூதம், அனைத்துடல்கள், அனைத்துலகம், ஆண்டான் அமைவும் ஆயின. அனைத்து மறைகளும் அஞ்செழுத்தாலாயதே. ஐம்பதெழுத்தும் அஞ்செழுத்திலடங்கும். அஞ்செழுத்து உண்ணும் மருந்துமாம்; அழியாக்காலமுமாம்; பண்ணமை கேள்வியுமாம், பயனர் பாடலுமாம்; விண்ணவர் தொழுந்தகை விழுப்பொருளுமாம். ஐந்தெழுத்தே அப்பரடிகளைக் கன்மேல் மிதப்பித்துக் கரை ஏற்றியது. ஆளுடையபிள்ளையார்க்கு ஆண்டவன் அஞ்செழுத்துப் பொறித்த செம்பொற்றாளம் அருளினன். இதனல் முழுமுதற் சிவபெருமான் திருக்கோவிற் பொருள்களுக்கெல்லாம் திரு ஐந்தெழுத்துப் பொறித்து வழங்குவதே முறைமை என்க. ஆளுடைய பிள்ளையார் ஆண்டான் அளித்தருளிய முத்துப் பல்லக்கைத் திரு ஐந்தெழுத்து ஓதியே ஏறியருளினர். இதனல் நாமெல்லாரும் எத்தொழிலைத் துவங்கும்போதும் திரு ஐந்தெழுத்தை ஓதித் துவங்குதல்வேண்டும் எனல் கடமையும் உரிமையுமாம் என்பது புலனும். மூவர் தமிழின் நடுவாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் முதன்மை வாய்ந்தது திரு ஐந்தெழுத்தே. மூவர் தமிழினுள் நடுவாகத் திகழ்ந்து விளங்கு

வது ஆளுடைய அரசர் திருமுறை. அது நான்கு ஐந்து ஆறு என மூன்றும். அவற்றுள் நடுவாயது ஐந்தாம் திருமுறை. அதன் நடுவில் திகழ்வது சிவயசிவ என்னும் திருஐந்தெழுத்தேயாம். அத்திருப்பாட்டு வருமாறு :

"விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாதுசி வாயவென்று
எண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே."

—ரு. ருக-சு.

'சிவாய' என்பதனைச் 'சிவயசிவ' என்றே ஓதுதல் வேண்டும். பாலைத்துறையனார் என்பது திணைபற்றியும் முழுமுதற் சிவபெருமானையே குறிக்கும்.

வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாய என்னும் திருமறையேயாம். உலகம் உலகியற்பொருள் அனைத்தையும் இயக்குவது திருஐந்தெழுத்தே.

ஐம்முகம் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ சாதம் என்ப. இவை முறையே நடுவு, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்குப் புலமாத் திகழ்வன. இவ்வைம் முகங்களையும் முறையே 'நமசிவய' என நவில்வர். திருஐந்தெழுத்து ஓங்காரத்தின் உள்ளொளியாதலின் ஓங்காரமின்றியே திருஐந்தெழுத்தோதும் தொன்மரபு அமைவுடைத்து. ஏனை மந்திரங்கட்கு ஓங்காரம் சேராவழிப் பயன் இன்றாம். இவை நெய்ச்சோற்றிற்கு நெய் வேண்டாமையும் ஏனைய சோற்றிற்கு நெய் இன்றியமையாமையும் போன்றனவாகும். ஓங்காரம் முத்தேவர் பிறப்பிடம். சிவபெருமானுக்கு இருப்பிடம்.

திலகவதி அம்மையார் திருநாவுக்கரசு நாயனார்க்குத் 'திருக்கயிலைக் குன்றுடையார் திருநீற்றை அஞ்செழுந்து ஓதிக்கொடுத்தார்.' இதனால் ஒருவர் மற்றொருவருக்கு எது கொடுப்பினும், தாம் எது செய்யினும் திருவைந்தெழுத்து

ஓதியே கொடுக்க, செய்க. பூசை முடிவில் திருஐந்தெழுத்து ஓதிக்கணித்தல் வேண்டும். திருநீலநக்க நாயனுர் அங்ஙனம் செய்தருளினர். திருஐந்தெழுத்து கருத்தின் பயனுகும். அமர்நீதி நாயனுர் திருஐந்தெழுத்து ஓதித் தராசுத்தட்டில் ஏறி நேர்நிற்கச் செய்தனர். தண்டியடிகள் நாயனுர் ஐந்தெழுத்தோதிக் குளத்தில் மூழ்கிக் கண்பெற்றருளினர். சிறப்புலி நாயனுர் திருஐந்தெழுத்தாலேயே சிவவேள்வி இயற்றிச் சிறந்தனர். மாற்றுரை மாற்றும் படை திருஐந்தெழுத்து. நாட்டில் நன்னெறிச் செல்வர்கள் ஓவாது திருஐந்தெழுத்து ஓதுவதால் உறுபிணிகள் வரத்தாம் அஞ்சும். ஐந்தெழுத்தும் பாடிய பொருளாய் உள்ளவன் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமான். அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர் நெஞ்சம் அகலா இருள்வண்ணமா யிருக்கும். ஆனய நாயனுர் புல்லாங்குழலில் வைத்து ஊதியது திருஐந்தெழுத்தே. ஆண்டவன் உவந்து அவர்க்கு மீண்டுவாரா வழியருள் புரிய வாயிலாயதும் அவ் ஐந்தெழுத்தே. அன்புடைத் தாய்மார்கள் இன்புடைச் சேய்களின் எழின்நலம் பாராட்டல் தாலாட்டல் சீராட்டல் முதலிய நற்பொழுதுகளில்எல்லாம் திருஐந்தெழுத்து ஓதிச்செய்வது சிறப்பாகும். அருளம்மையார் (உமையவள்) திருவாயின்கண் இடையறாது ஓதப்பெற்றது திருஐந்தெழுத்தே. பெருமிழலைக் குறும்ப நாயனுர் திரு ஐந்தெழுத்தினையே கேளும் பொருளும் உணர்வுமாய்க்கொழுமினுர். காரைக்கால் அம்மையார் ஐந்தெழுத்தோதி வண்டல் பயின்றனர். வண்டல்—விளையாட்டு.

நம்பிஆரூரர் வரவுநோக்கிக் குருகாவூர்க் குழகர் பொதிசோறும் பந்தரும் அமைத்து வழிமேல் விழிவைத்திருந்தருளினர். நம்பியாரூரரும் அப்பந்தரிடை எழுந்தருளினர். 'சிவாயநம' எனப்பேசி அமர்ந்தனர். இவ்வொழுக்கத்தையே நாமும் கைக்கொண்டொழுகல் வேண்டுமென்பதை மறவாதிருப்போமாக. புகழ்ச்சோழ நாயனுர் தழலிடை மூழ்கும்போதும் ஓதியது திருஐந்தெழுத்தே.

ஐந்தெழுத்தாட்சி

க. திருஐந்தெழுத்து எப்பொழுதும் எண்ணவேண்டுவது. உ. அது கூற்றுவனை அஞ்ச உதைப்பிப்பது. ந. அது நான்மறைப் பொருளாவது. ச. அது வானவரை ஆள்வது. ரு. அது சிவதீக்கை பெற்ற அந்தணர்க்கு அந்தி மந்திரமாவது. சு. அஃது எவ்வகை இடரினையும் செவ்விதிற் கெடுப்பது. எ. அஃது ஓதினர் அனைவர்கட்கும் சிவப்பேறு நல்குவது. அ. அஃது எல்லாம் அஞ்செழுத்தாயிருப்பது போல் இறைவன் திருவிரல் ஐந்துமாயிருப்பது; திருவிரல் ஐந்தும் முறையே பெருவிரலிலிருந்து 'சிவயநம' வாகும். கூ. அஃது எக்காலத்தும் எவ்விடத்தும் துணையாயிருப்பது. க0. அது வீடு விழைந்தார்க்குத் துன்பம் நீக்கிப் பெரும்பேறு அருள்வது. கக. அது திருக்கூத்தாய்த் திகழ்வது. கஉ. அஃது உமையம்மையார் அருமறையாகக் கேட்டருளியது. கந. அஃது இராவணன் பாடிப் பேறுபெற்றது. கச. அது தொண்டர்கட்குச் சிவவுலகருள்வது. கரு. அது திருவடிப் பித்தராயுள்ளார்க்குப் பெரும் பேறளிப்பது. கசு. அது திருநீறணியும் செந்நெறியினர் வினைப்பகைக்கு உரும்ஏறனைய படைபோன்றது. கஎ. அஃது ஓதினவர்களை உம்பராக்கும் ஒண்மையது. கஅ. அஃது ஓதுவாரை நன்னெறிக்கு உய்ப்பது. ககூ. அது நான்மறையினும் மெய்ப் பொருளாய்த் திகழ்வது. உ0. அஃது ஓதுவார்க்குத் தேன் போலினிப்பது. உக. அது பேரன்பு மிகுதியால் சிவமணி*

---

*"தனதான தந்தனத்—தனதான

அபசார நிந்தைபட் டுழலாதே

அறியாத வஞ்சரைக் குறியாதே

உபதேச மந்திரப் பொருளாலே

உனைநானி னைந்தருள் பெறுவேனோ

இபமாமு கன்தனக் கிளையோனே

இமவான்ம டந்தையுத் தமிபாலா

செபமாலை தந்தசற் குருநாதா

திருஆவி னன்குடிப் பெருமாளே."

செபமாலை-சிவமணி —திருப்புகழ், எஉ.

கைக்கொண்டு முறையாகக் கணிப்பார்க்குச் சிவஙிலையை அருளுவது. உஉ. அஃது இயமன் தூதரையும் அஞ்சுவிப்பது. உ௩. அது தீங்கை அகற்றி நலம் ஓங்குவிப்பது. உ௪. அது வல்வினை அகற்றி நல்லின்பம் நல்குவது. உ௫. அது சிவவுலகினருடன் சேர்ப்பிப்பது. உ௬. அஃது அறியாப் பகைஞரும் அறிந்து நெறிமுறை நடந்தால் அவர்கட்கு உய்வகை அருள்வது. உ௭. அது செருக்கடங்கி உருக்கமுடன் வழுத்துவார்க்கு உண்மை அருள்வது. உ௮. அது வேண்டுவார்க்கு ஈண்டிய அமிழ்தம் அளிப்பது. உ௯. அது கட்டறுத்துப் பேறு நல்குவது. ௩0. அது நாவினுக் கருங்கலமாயுள்ளது. ௩௧. அது செய்த பாவங்களை எய்த ஒண்ணுதபடி அறுப்பது. ௩உ. அது நடுக்கத்தைக் கெடுப்பது. ௩௩. அது மக்கட்கு மங்கா அணிகலமாண்பது. ௩௪. அஃது ஏற்றமிக்க நலத்தினை ஆற்றக் கொடுப்பது. ௩௫. அது நாடினுர்க்கு நாட்டம் நல்குவது. ௩௬. அது விளக்கங்கட்கு விளக்கம் தருவது. ௩௭. அஃது அடைந்தார்க்கும் அடைவார்க்கும் ஆக்கம் அருள்வது. ௩௮. அது பிறப்புப் பெருந்துன்பத்தை அறப் போக்குவது. ௩௯. அது நாத்தழும்பேற ஓதுவார்க்கு நற்றுள் அருள்வது. ௪0. அது மனத்தொடர்பு இன்றியும் நா மறவாது வழுத்தும் நன்மை அருள்வது. ௪௧. அஃது அஞ்சினுர்க்கு அரணுயிருப்பது. ௪உ. அது விரும்பி நினைவார்தம் வினைகளை வேரறக் களைவது. ௪௩. அது தலையாய மந்திரமாயுள்ளது. ௪௪. அது தீய பிறவிநோய் தீர்க்கும் மருந்தாவது. ௪௫. அது புறத்தே பூத்தொடுப்பார் அகத்தே அன்புநாரா அஞ்செழுத்தும் நெஞ்சு தொடுக்க அருள்வது. ௪௬. அஃது ஆன்றேர் கருத்தின் பயனுய் அமைவது. ௪௭. அது பொய்கையில் மூழ்குவார் புகன்று மூழ்கப் புண்ணியம் தருவது. ௪௮. அது சித்தந்தெளியும் சீர்மையருள்வது.

ஐந்தெழுத்துப் பதிகம்

மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழின்கண் காணப்படும் திரு ஐந்தெழுத்தின் திருப்பதிகங்கள்

நான்கு. அவை முறையே ஆளுடைய பிள்ளையார் அருளியது இரண்டு, ஆளுடைய அரசர் அருளியது ஒன்று, ஆளுடைய நம்பியார் அருளியது ஒன்று என்க.

ஆளுடைய பிள்ளையார் அருளிய திருப்பதிகங்கள் இரண்டும் முறையே தாய்மையும் தலைமையும் ஆகிய வாய்மை மந்திரம் திரு ஐந்தெழுத்து என்பதும், சிவதீக்கை செய்வார் திருமுறை வழியாகச் செய்யவேண்டும் என்னும் திருவருட் குறிப்பைப் புலப்படுப்பதும் ஆம் என்க.

ஆளுடைய அரசரைக் 'கொல்லாமை மறைந்துறையும்' பொல்லா அமணர்கள் மன்னனை வயப்படுத்தி ஏழு நாள் நீற்றறையிலிட்டனர்; நஞ்சு கலந்த பாற்சோறு நல்கினர்; யானையைக் கொண்டு இடரச் செய்தனர்; இறுதியாகக் கல்லிற் பிணித்துக் கடலிற் பாய்த்தினர். அரசர் கல்மிதக் கப்பாடி யருளினர். முதன்மைக்கும் தீக்கைக்கும் அமைந்த திரு ஐந்தெழுத்தைக் கைக்கொண்டு ஒழுகும் செந்நெறியினர்தம் எழுவகைப் பிறப்புக்குரிய எஞ்சுவினைகள் நீறுக்கப் படுதலும், ஊழ்வினைப்புசிப்பும், ஆணவமல அடக்கமும், பிறவிப் பெருங்கடல் நீந்தலும் நிகழும் என்னும் மெய்ம்மை முறையையே அரசர் திருவரலாற்றுற் காண்க. இவ்வுண்மை வரும் திருப்பாட்டாற் புலனுகும் :

" இருவினைப் பாசமும் மலக்கல்* ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ."

—ரு.உ. திருநா - கஉசு.

சிவதீக்கைப் பேறுடையார் அண்ணலார் அடிமறவாத் திருவருளோடு இடையறுது திரு ஐந்தெழுத்தோதி வரும் சீர்மையுடையராவர். ஒரோருகால் மறக்கினும் அவர்தம் பழக்க மிகுதியால் இயல்பாகவே அவர்தம் நா "நமச்சிவாய" என நவிலும். அவ்வுண்மை புலப்படுத்துவதே ஆளுடைய நம்பி அருளிய திருப்பதிகம்.

* 'முன்புதிருக்' - கஉ. கண்ணப்பர், கடுடு.

திருச்சிற்றம்பலம்

" துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடோறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே." —ந. உஉ - க.

துஞ்சல் - தூங்கல். துஞ்சலிலாதபோழ்து - விழிப்பு. எனவே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் ஆகிய ஐந்து நிலையும் பெறப்படும். வஞ்சகம் அற்று வழுத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பயன் எய்தும்.*

" வீடு பிறப்பை அறுத்து மேச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாடோறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி யுகப்பன அஞ்செ ழுத்துமே." —ந உஉ-எ.

திருவருளால் பிறப்பை அறுத்து வீடுபேற்றை மெச்சும் மெய்யடியார். வீடு என்பதற்கு இறப்பு எனக்கூறினும் பொருந்தும். கூத்தப் பெருமான் திருவுரு திருஐந்தெழுத்தாலாயது. அதனால் திருக்கூத்தும் ஐந்தெழுத்தாலாயதே.

" புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்கு
அத்திர மாவன அஞ்செ ழுத்துமே.' —ந. உஉ-கo.

அத்திரம் - எறிபடை.

---

* "தூயானைச் சுடர்ப்பவழச் சோதி யானைத்
தோன்றிய எவ்வுயிர்க்கும் துணையாய் நின்ற
தாயானைச் சக்கரமாற் கீந்தான் தன்னைச்
சங்கரனைச் சந்தோக சாமம் ஓதும்
வாயானை மந்திரிப்பார் மனத்து ளானை
வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச்
சேயானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே." —சு.௰-ச.

சந்தோகம் - சாமவேத இலக்கணம்.

" காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும்* மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே." —ந. சகூ-க

நன்னெறி - திருநெறி; சிவநெறி.

" நெக்கு ளார்வம் மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே." —ந. சகூ-ந.

அக்குமாலை - சிவமணி. எண்ணுவார் - உள்ளத்தே கணிப்பார்; அறிவாற் கணிப் (மானதம்)பார். (மெல்லக் கணிப்பார் செவி கேட்கக் கணிப்பார்: மந்தம், உரை.)

" இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினுல்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே." —நச. சகூ.

இத்திருப்பாட்டு ஓதுமுறையாகும். நியமம் - ஒழுங்கு. நயனன் - கண்ணன்.

" சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே." —ச. கக-க.

திருந்தடி - இயல்பாகவே கட்டின் நீங்கி ஆவிகளின் கட்டை நீக்கும் திருவடி.

" இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே." —ச. கக-அ.

---

* அறம் பொருள் இன்பம் வீடு நான்கினையும் நவிலும் தமிழ்த் திருநான்மறை. 'சுழிந்த கங்கை' —க. ௰ந - சு.

இல்லக விளக்கு - வீட்டு விளக்கு ; எல்லையுட்பட்டது. சொல்லக விளக்கு - உணர்வுக்குணர்வாம் சிவ விளக்கு; எல்லையுட்படாதது. பல்லக விளக்கு - ஞாயிறு, திங்கள்; இருநிலையுமுள்ளது.

"முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே." —ச. கக-கூ.

முன்னெறி - முதன்மையாகிய நெறி. முக்கணன் தன்னெறி - சித்தாந்த சைவம். அடைந்தவர் - வீட்டுயிர்; அவாவிலார் ; சீவன்முத்தர்.

"மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாஉனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே."—எ. அச-க.

பாவித்தல் : இடையறாது எண்ணுதல். இதுவே அகவழிபாடு.

"அஞ்சினார்க்கரண் ஆதியென்றடி
யேனுநான்மிக அஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கருள்
நல்கினாய்க்கழி கின்றதேன்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே." —எ. சஅ-ரு.

அரண் ஆதி-புகலிடம் ஆகின்றாய். அருள்நல்கினாய்க்கு-அருள்நல்கும் நினக்கு. அழிகின்றதென் - கெட்டுப் போவதென்.

"சாரணன் தந்தை எம்பிரான்எந்தை
தம்பிரானேன்பொன் மாமணிஎன்று
பேரெணாயிர கோடிதேவர்
பிதற்றிநின்று பிரிகிலார்
நாரணன்பிர மன்தொழுங்கறை
ஊரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணாஉனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே."—எ. ௭அ-கூ.

எல்லாத் தேவரும் வல்லவா தொழும் வள்ளல் சிவபெருமான். அவனே உலக காரணன். காரணன் - வினை முதற் காரணன். அவன் திருப்பெயர் நமச்சிவாய. பயிற்சியால் நாக்குத் தூண்டுதலின்றித் தானே ஓதும்.

"அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு ஆரூர்புக்கு
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே."
—எ. அரு-க.

அஞ்சுபதம் - ஐந்துசொல்; சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு, மறைப்பு என்னும் ஐந்து சொற்களின் முதலெழுத்துக்கள் சிவயநம என்ற ஐந்தெழுத்தாம்.

"போற்றிஓ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றிஓ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றிஓ நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றிஓ நமச்சிவாய சயசய போற்றி போற்றி."
—அ. எ. காருணி - உ.

போற்றி - காக்க. ஓ: இரக்கக் குறிப்பு.

"உற்றாய் என்னும்உன்னை யன்றி மற்றோன்
றுணரே னென்னும் உணர்வுகள் கலக்கப்
பெற்றாய ஐந்தெழுத்தும் பிதற்றிப் பிணிதீர
வெண்ணீறு இடப் பெற்றே னென்னும்
சுற்றாய சோதி மகேந்தி ரஞ்சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சிற்
குற்றாயென்னும் குணக்குன்றே யென்னும்
குலாத்திலலை அம்பலக் கூத்தனையே."

கூ. திருமா. ரு-கக.

ஆய ஐந்தெழுத்து - ஆகிய ஐந்தெழுத்து. குற்றாய் - இருத்துவாய்.

"வாயிலே வைகதும் அளவில் மருந்தாமித்
தீய பிறவிநோய் தீர்க்குமே—தூயஏ
கம்பெருமா தேவியோடு மன்னும் கயிலாயத்து
எம்பெருமான் ஒரஞ் செழுத்து."—கக. நக். கைலை-ரு௬.

ஏகம் பெருமாதேவி - ஒப்பற்ற பெரியநாயகி.

"ஆங்கவர் மனத்தின் செய்கை
அரனடிப் போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை
உயர்ந்தஅஞ் செழுத்துக் காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை
தம்பிரான் அடியார்க் காகப்
பாங்குடை உடையும் கீளும்
பழுதில்கோ வணமும் நெய்வார்."

திருச்சிற்றம்பலம் —கஉ. நேச-ரு.

"அஞ்செழுத்து மேஅம்மை அப்பர்தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆறாகப் பெற்றறிந்தே—அஞ்செழுத்தை
ஓதப்புக்கு உள்ள மதியும் கேடிலுமைகோன்
கேதமற வந்தளிக்குங் கேள்."

—திருக்களிற்றுப்படியார். உ௫.

உள்ளமதி - ஆன்ம அறிவு.

" அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித் திதயத்தில்—அஞ்செழுத்தால்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டம் சானிக்கில்
அண்டனும் சேடனும் அங்கு."

—சிவஞானபோதம். கூ. ரு-க.

கோதண்டம் - புருவநடு. சானித்தல் - தேனித்தல். தியானித்தல். அண்டன் - பிரிவின்றிச்சேர்ந்துறைவோன்; இறை. சேடன் - இறையடிபேணும் அடிமை.

" அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத் தர்ச்சித்து
அஞ்செழுத்தால் குண்டலியின் அனலை ஓம்பி
அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழிநின்று
அஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி அருக்கன்
அணையரவம் போற்றேன்றும் ஆன்மாவில் அரனே."

—சித்தியார். கூ. அ.

" திருஎழுத் தைந்தில் ஆன்மாத் திரோதமா சருள்சி வன்சூழ்
தரநடு நின்ற தோன்றும் தன்மையும் தோன்மை யாகி
வருமுறை யுதியாலே வா சி யி லாசை யின்றிக்
கருவழிச் சுழலு மாறுங் காதலர்க் கோத லாமே."

—சிவப்பிரகாசம், கூக.

ஆன்மா நடுவின்றதாகும்: 'சிவயநம'

" ஆசுறு திரோத மேவா தகலுமா சிவ முன் னுக
ஓசை கோ ளதனி னம்மே லொழித்தரு ளோங்கு மீள
வாசியை அருளு மாய மற்றது பற்று வுற்றிங்கு
ஈசனின் ஏக மாகும் இது திரு எழுத்தின் ஈடே."

—சிவப்பிரகாசம், கூஉ.

சிவயநம எனச் சிவமுன்னுக ஓதுதல் வேண்டும்.

"அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகின்."

"ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞானநடம் தான்நடுவே நாடு."

—திருவருட்பயன். கூ-உக, உங.

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்-நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கோடி."

—கொடிக்கவி-ச.

எட்டெழுத்து: ஓம் அம் உம் சிவயநம. ஆறெழுத்து: ஓம் சிவயநம. நாலெழுத்து: சிவசிவ. பேசுமெழுத்து: வ. பேசா எழுத்து: சி.

KOVILOOR ANDAVAR
A. No. 34783
LIBRARY, KOVILOOR

அப்பர் அச்சகம், 2/140, பிராட்வே, சென்னை-1—C. 5200.

கழக வெளியீடு : எ0கூ

பதிப்பாளர் :
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.
தலைமை நிலையம் :
24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

விலை அணா 1.

அப்பர் அச்சகம், சென்னை-1.—C. 5,200.